**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.D.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ரங்கநாதன் | அசல் வழக்கு எண். | 44/2022 |
| த/பெ. | - | வெங்கடாஜலம் | வா.சா. | 3 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

25.06.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. எனது மகனான வாதி கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் விபரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியும். தாவா சொத்தை பொறுத்து எனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், தேதி வருடம் எனக்கு நினைவில் இல்லை.

2. என் மகனுக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமியை நான் தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளேன் என்றால் 2 முதல் 2 -1/2 செண்டு வரை கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம்தான் நான் எனது வாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் விஸ்தீரணம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிழக்கு-மேற்கில் - 6-3/4 அடி, வக்டகு - தெற்கு 144 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த சதுரடிகள் 972 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் சக்குபந்தியில் என் மீதி மனைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. தாவா சொத்திற்கு மேற்கு புறம் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தின் சக்குபந்தியில் என் மீதி மனைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் வாய் மொழி பாக பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி வாய்மொழி பாக பிரிவினை எந்த தேதியில் ஏற்பட்டது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாக பிரிவினை ஏற்படவில்லை என்றும் அதனால்தான் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரியரல்ல.

5. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உட்பிரிவு சர்வே எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் சொத்து விபரத்தில் வழக்கு சொத்தின் உட்பிரிவு குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 972 சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.972 அடிக்கு மேல் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தானம் கொடுக்கப்பட்ட சொத்துக்களுக்கான பட்டாவனது ஆதியில் ஏழுமலை பெயரில் இருந்தது என்றால் சரிதான், ஏழுமலை எனது உடன் பிறந்த சகோதரர். எனது தந்தை வெங்கடாஜல கவுண்டருக்கு நான் உட்பட 5 நபர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். என் தந்தைக்கு 3 ஆண் மற்றும் 2 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். எனது தந்தை எந்த ஆண்டு இறந்தார் என்று என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய தந்தையின் வாரிசு சான்றுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 5 நபர்கள். எனது பாட்டனாருக்கு முதல் மனைவி மூலம் 4 குமாரர்கள், முதல் மனைவி இறந்த பின்பு 2டாவதாக திருமணம் செய்த மனைவி மூலம் 3 பெண் பிள்ளைகள் மற்றும் 1 ஆண் வாரிசுகள். எனது அப்பா இறந்த பின்பு பிள்ளைகள் யாரும் பாக பிரிவினை செய்துகொள்ளவில்லை என்றால் , எனது அப்பா உயிருடன் இருந்தபோதே சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து கொடுத்துவிட்டார், எனக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தை நான் எனது சகோதரர்களுக்கு விட்டு கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்.

8. வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நான் வாதிக்கு தானம் கொடுத்த சொத்தானது எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டிருந்து அவர் மூலம் கிடைக்கபெற்ற சொத்துக்கள். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது உடன் பிறந்த சகோதரர் ஏழுமலையின் மகள். எனது சகோதரர் ஏழுமலைக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட நத்தம் சொத்துக்களை 1ம் பிரதிவாதியானவர் அவரது சகோதரிகளிடமிருந்து கிரையம் பெற்று அனுவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்தான சர்வே எண்.318/4ல் எனக்கு எப்போதும் உரிமை இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஆதியில் என்னுடைய சகோதரர்கள் ஏழுமலைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஏழுமலைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால்தான் தாவா சொத்துக்களை பொறுத்து நாங்கள் யாரும் பாக பிரிவினை கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லாததால்தான் சர்வே எண்.318/4 ஐ நான் வேண்டுமென்றே வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதுவதற்கு எனக்கு உரிமைய இல்லாத போது அதன் அடிப்படையில் வாதி வழக்கு சொத்தில் உரிமை கோருவது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

எனக்கும் என்னுடைய சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாக பிரிவினையை நிரூபிக்கும் வகையில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரமும், வழக்கு சொத்து விபரமும் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. சக்குபந்திகளும் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் உள்ள கருத்து வேறுபாடு காரணமாக எனது மகனான வாதியை வைத்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணத்தை நான் எழுதிகொடுத்தேன் என்பதற்காகவும், வாதி என் மகன் என்பதற்காகவும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.